**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-233/2019**

**List of Witness LW13 Examined as PW7**

| | | | |
|---|---|---|---|
| Name | முருகேசன் | Age: | 48 |
| Father’s name | கருப்பையா | Calling: | விவசாயம் |
| Village | முதுகுளம் | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.08.2025

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2010 ஆம் வருடம் எனக்கு சொந்தமான நகையை கந்தர்வக்கோட்டையில் உள்ள ARN அடகு கடையில் ரூ.20,000/-ற்கு அடமானம் வைத்தேன். நான் அடமானம் வைத்த போது, கடையில் 1 ஆம் எதிரி கிருஷ்ணன் இருந்தார். நகையை திருப்பிய போது, 1 ஆம் எதிரி கிருஷ்ணன், 3 ஆம் எதிரி ஜெகதாம்பாள் இருந்தனர். அடமானம் வைத்த போது, கொடுக்கப்பட்ட ரசீதை அடமானத்தை திருப்பிய போது திரும்ப கொடுத்து விட்டேன். போலிசார் என்னை நேற்று விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை நேற்று விசாரித்ததற்கு முன்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கடையின் உரிமையாளர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 ஆம் எதிரி கிருஷ்ணன் கடையில் என்ன செய்து கொண்டிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் நகையை அவரிடம் அடமானம் வைத்தேன், அவர் பணம் கொடுத்தார். நான் நகையை அடமானம் வைத்து திருப்பியதில் 1 ஆம் எதிரி கிருஷ்ணன் நல்ல முறையில் முடித்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக மேற்படி கடையில் வரவு செலவு செய்து வந்தேன் என்றால் 3 வருடங்களாக செய்து வந்தேன். நகையை திருப்பும் போது, கிருஷ்ணன் மட்டும் தான் இருந்தார் என்றால் சரியல்ல, 1 ஆம் எதிரியும் 3 ஆம் எதிரியும் இருந்தார்கள். 3 ஆம் எதிரி 1 ஆம் எதிரிக்கு அன்றைய தினம் உணவு கொண்டு வந்திருக்கலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**